# மாவட்ட தடகள போட்டி சுகுணா பள்ளிக்கு பதக்கம்



**கோவை, நவ. 20–**

ரெட் பீல்ட்ஸ் வளாகத்தில் உள்ள விமானப்படை நிர்வாக கல்லூரியில் நடந்த, மாவட்ட அளவிலான தடகளப்போட்டியில், சுகுணா பிப் பள்ளி மாணவியர் ஆறு பதக்கங்கள் வென்றனர்.

விமானப்படை நிர்வாக கல்லூரி சார்பில், கேலோ பாரத் அபியான் திட்டத்தின் ஒரு பகுதியாக, பள்ளிகளுக்கு இடையேயான தடகளப்போட்டி நடந்தது. இதில் பங்கேற்ற சுகுணா பள்ளி மாணவியர், 12 மற்றும், 14 வயது பிரிவுகளில் ஆறு பதக்கங்கள் வென்றனர்.

வெற்றி பெற்றவர்கள்: 12 வயது பிரிவு குண்டு எறிதலில் சவுஜன்யா – தங்கம், 14 வயது 400மீ., ஓட்டத்தில் அஷ்விகா – வெள்ளி, 100மீ., ஓட்டத்தில் ஸ்ம்ருதி சாஸ்வதா – வெள்ளி, 200மீ., ஓட்டத்தில் சம்வர்தா – வெண்கலம் மற்றும், 12 வயது பிரிவு தொடர் ஓட்டத்தில் வெண்கலம், 14 வயது பிரிவு தொடர் ஓட்டத்தில் வெள்ளி பதக்கம் வென்றனர்.

போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ், பதக்கங்கள் வழங்கப்பட்டன.